**08.04.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

OS.182/2018

வா.சா. **1**

பெயர். திரு.பால்ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>கூடுதல் முதல் விசாரணை</u>

நான் ஏற்கனவே ஒரு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது வாதிகளாகிய நாங்களும், பிரதிவாதிகள் 1, 2,6,7,8 மற்றும் 11 ஆகியோர்களுக்கிடையே பஞ்சாயத்தார்களின் தலையீட்டின் படி நாங்கள் எங்களுக்குள் சமரசமாகி ஒரு சமரச மனு தாக்கல்செய்துள்ளோம். அந்த சமரச மனுவில் கூறப்பட்டுள்ளவாறு B அட்டவனை சொத்து எங்களுக்கும், 1, 4 பிரதிவாதிகள் 2- ம் தரப்பினராகவும், 9, 10, 11 பிரதிவாதிகள் 3- ம் தரப்பினராகவும், ஒவ்வொரு தரப்பினருக்கும் தலா 1/ 3 பங்கு முதல்நிலை தீர்ப்பாணை வழங்க பிரார்த்திக்கிறோம். அதுபோல ஏ அட்டவணை சொத்துளை 2, 8 - பிரதிவாதிகளுக்கு ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை வழங்க எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. புல எண். 160/2 25 சென்ட் நிலம் பொறுத்து வழக்கினை தள்ளுபடி செய்ய ஆட்சேபணை கிடையாது. நான் 2- ம் வாதி மற்றும் வாதிகள் 4 முதல் 7- ஆகியோர்களுக்காக இந்த வாக்குமூலம் அளிக்கிறேன். அவர்களும் இன்று இந்த நீதிமன்றத்திற்கு வந்துள்ளனர்.